# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 135/மா/2023**
**நாள் : 19.9.2023**

திரு. S. திருஞானம்,
சென்னை – 600 001. – முறையீட்டு மனுதாரர்

கண்காணிப்புப் பொறியாளர்,
இயந்திர பொறியியல் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
சென்னை. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, சௌகார்பேட்டை, திருப்பள்ளித் தெரு, எண்.51/81 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. திருஞானம் என்பவரின் 07.05.2023 நாளிட்ட மனு, 08.05.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 135/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, சௌகார்பேட்டை, திருப்பள்ளித் தெரு, எண்.51/81 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. திருஞானம் என்பவரின் 07.05.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில்,

சென்னை பெருநகர மாநகராட்சி எல்லைக்குட்பட்ட நீர் வழிதடங்களில் மிதக்கும் கழிவுகளை அகற்றி கொசு உற்பத்தியைக் குறைக்கவும், மழைக்காலங்களில் நீரோட்டம் தடைபடாமல் இருக்கவும், இயந்திர பொறியியல் துறை மூலம் ஆம்பிபியன் சிறப்பு உபகரணம் (Amphibian Equipment – Water Master Classic V (4158) நீர்வழித்தடங்களில் தூய்மை பணி மேற்கொள்ள ரூ.4,13,68,763/- தமிழக அரசு நிதியும், சென்னை மாநகராட்சி இயந்திர பொறியியல் துறை மூலதன நிதியும் ரூ.75,21,593/- ஆக மொத்தம் ரூ.4, 88,90,356/- மதிப்பீட்டில் கடந்த 2019-ஆம் ஆண்டு M/s. Aquamec Finland Ltd., என்கிற நிறுவனத்திடமிருந்து அவர்களது அங்கீகரிக்கப்பட்ட இந்திய விற்பனையாளரான M/s. Dharshan Dredging Constructions Pvt. Ltd., அவர்கள் மூலமாக கொள்முதல் செய்யப்பட்டது.

இந்தியாவில் திருவாளர் தர்சன் அகழ்வாராய்ச்சி மற்றும் கட்டுமான தனியார் குழுமம் அங்கீகாரம் பெற்ற நிறுவனமாகும். உயர் தொழிற்நுட்ப அம்சங்கள் கொண்ட உபகரணம் என்பதால், உபகரணத்திற்கு தேவையான உதிரிபாகங்கள் இவர்களிடமிருந்து தான் பெறமுடியும். மேலும், இந்த உபகரணங்கள் இயக்குவதற்கு நிபுணத்துவம் வாய்ந்த பணியாளர்கள் மேற்கூறிய நிறுவனத்திடம் தான் உள்ளனர் என்று சென்னை மாநகராட்சி அதிகாரிகள் கூறுகின்றனர்.

கடந்த 09.01.2022 அன்று மின்னணு ஒப்பந்தம் கோரப்பட்டது. கடந்த 03.02.2022 அன்று மின்னணு ஒப்பந்தம் திறக்கப்பட்டு, தொழில்நுட்ப தகுதிப்பெற்ற இரண்டு நிறுவனங்கள் (1) திருவாளர் தர்சன் அகழ்வாராய்ச்சி மற்றும் கட்டுமான தனியார் குழுமம் (அங்கீகரிக்கப்பட்ட இந்திய நிறுவனம் M/s. Aquamec Finland Ltd., மற்றும் (2) திருவாளர். N. முகமது ஜமாலுதின் (வாடகை ஒப்பந்ததாரர் அகழ்வாராய்ச்சி நிறுவனம்), ஆகிய நிறுவனங்கள் வழங்கிய ஒப்பந்த தொகை முறையே (1) ரூ.3,59,02,500/- (2) ரூ.3,64,51,500/- ஆகும். சென்னை மாநகராட்சியால் தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீட்டு தொகையை விட அதிகமாகும். (சென்னை மாநகராட்சியின் தோராய மதிப்பீட்டு தொகை ரூ.3,47,20,000/-) இந்த மதிப்பீட்டு தொகை கடந்த 2022-ஆம் ஆண்டு ஜுன் மாதம் கணக்கிடப்பட்டது. சென்னை மாநகராட்சி குறைந்த விலைப்புள்ளி ஒப்பந்ததாரரான திருவாளர் தர்ஷன் அகழ்வாராய்ச்சி மற்றும் கட்டுமான தனியார் குழுமத்திற்கு விலைக்குறைப்பு வழங்க கோரியதன் பேரில் மேற்கண்ட நிறுவனம் ரூ.3,40,25,100/- என்று 11.02.2023 அன்று கடிதம் வாயிலாக விலை குறைப்பு செய்து வழங்கினார். ஒப்பந்தப்பணி மேற்கூறிய நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

ஆம்பியியன் உபகரணம் வருடத்தில் 300 நாட்கள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு செய்யப்பட உள்ளதாக கணக்கிட்டு உள்ளனர். இதில் ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்களை தவிர்த்து உள்ளனர். ஆம்பியியன் உபகரணத்தின் உபயோகமே நீர்வழித்தடத்தில் உள்ள மிதக்கும் கழிவுகளை அகற்றுவது, பருவ மழைக்காலங்களில் அதிக அளவில் மிதக்கும் கழிவுகள் நீர்வழித்தடங்களில் அதிகம் சேரும் வாய்ப்பு உள்ளது. ஆனால், மார்ச், ஏப்ரல், மே, ஜுன் மற்றும் ஜுலை கோடை வெப்பம் அதிகமாக உள்ள காரணத்தினால் இயற்கையாக நீர்வழித்தடங்களில் நீரோட்டம் இல்லாமல் போகும் நாட்களையும் சேர்த்து மொத்தமாக 300 நாட்கள் என்று கணக்கிட்டுள்ளனர். தோராயமாக, வாரத்திற்கு நான்கு நாட்கள் என்று உபகரணத்தை இயக்கினால் மூன்று வருடத்திற்கு ரூ.2,26,83,400/- தோராயமாக செலவாகும். ஆனால், ஒப்பந்தபுள்ளி ரூ.3,40,25,100/- என்று கூறுகின்றார்கள். மேற்கூறிய கோடைக்கால மாதத்தையும் சேர்த்து 200 நாட்கள் இயக்கினால் ரூ.1,13,41,000/- வித்தியாசம் வருகின்றது. திரு. N. மகேசன் அவர்கள் மேற்கூறிய நிறுவனத்திடம் பிரதிபலனாக ரூ.50,00,000/-க்கு மேல்பெற்றுள்ளார்.

சென்னை மாநகராட்சியில் வாடகை ஒப்பந்த முறையில் பல வாகனங்கள் இயக்குகின்றன. இதேபோல் அனைத்தையும் கணக்கீடு செய்துள்ளனரா ? என்று தெரியவில்லை. மேலும், ஒரு இயந்திரம் தினமும் பராமரித்தால், அது உயர் தொழில்நுட்ப உபகரணம் இல்லை, எதற்கும் உதவாத ஒரு ஜடபொருள்.

சொந்த உபகரணத்தையே இயக்குவதற்கும் மற்றும் பராமரிப்பதற்கும் சென்னை மாநகராட்சி இவ்வளவு பெரிய தொகையை செலவு செய்வது வியப்பாக உள்ளது. சென்னை மாநகராட்சியில் உள்ள ஆணையர் மற்றும் பிற இந்திய குடிமை பணி அதிகாரிகளுக்கு தெரியாமல் போவது பெரும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. மேலும், அதிகாரிகளின் கைப்பாவையாக ஆணையர், இணை ஆணையர் மற்றும் துணை ஆணையாளர்கள் உள்ளனர். சென்னை மாநகராட்சி அதிகாரிகள் பரிந்துரைத்து சமர்ப்பிக்கும் ஆவணங்களை சரியான முறையில் ஆய்வு செய்யாமல் ஒப்பளிப்பதே இதுப்போன்ற முறைகேடுகளுக்கு காரணமாக உள்ளது.

மேலும் சென்னை மாநகராட்சியால் தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீட்டு தொகை ரூ.3,47,20,000/- எந்த பகுப்பாய்வு முறையில் கணக்கீடு செய்தார்கள் என்று தெரியவில்லை. CPM PERT ஆகிய பகுப்பாய்வு முறையில் கணக்கீடு செய்யாமல், சென்னை மாநகராட்சிக்கு உகந்த முறையில் கணக்கீடு செய்யாமல், தனக்கு வருமானம் வரும் வகையில் கணக்கீடு செய்து ஒப்பந்தப்பணி வழங்கியுள்ளார் திரு. N. மகேசன் அவர்கள் தலைமை பொறியாளர் (இயந்திரம் மற்றும் திடகழிவு மேலாண்மை)

எனவே, முறையற்ற முறையில் வழங்கிய ஒப்பந்தத்தை ரத்து செய்யுமாறும், முறையற்ற முறையில் ஒப்பந்தம் வழங்கி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு பெரும் தொகை இழப்பு ஏற்படுத்தியதற்காகவும், (ரூ.1,13,41,000/-) முன்னரே முடிவு செய்து, இயந்திரதனமாக சுயவிருப்பத்தின்பேரில் சிலருக்கு சாதகமாக செயல்பட்டு ஒப்பந்தப்பணி வழங்கிய திரு. N. மகேசன் அவர்கள் சென்னை மாநகராட்சி தலைமை பொறியாளர் (இயந்திரம்) மீது, சென்னை மாநகராட்சி பணி (கட்டுப்பாடு, வகைப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970ன்படி கடும் நடவடிக்கை எடுக்குமாறு (மாண்புமிகு) முறைமன்ற நடுவர் அவர்களை அன்புடன் வேண்டுகின்றேன் என்று தெரிவித்துள்ளார்.

**மேற்கண்ட புகார் மனு மீது 23.5.2023 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறையிடம் அறிக்கை கோரப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறையின் மேற்பார்வை பொறியாளர் தன்னுடைய 16.6.2023 நாளிட்ட அறிக்கையில்:-**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பராமரிக்கப்படும் நீர் நிலைகளில் வளர்கின்ற ஆகாயத்தாமரை மிதக்கும் கழிவுகள் மற்றும் சகதி ஆகியவற்றால் ஏற்படுகின்ற நீரோட்ட தடையினை அகற்றும் பணியினை தொழிலாளர்களைக் கொண்டு மேற்கொண்டு வந்த நிலையில் உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள நீர் நிலைகளில் மனிதர்களுக்கு மாற்றாக சிறப்பு உபகரணங்கள் கொண்டு நீர்நிலைகளை சுத்தப்படுத்தும் பணிக்காக நீரிலும் நிலத்திலும் செல்லக்கூடிய (Amphibian Classic V C4158) உபகரணம் கடந்த 2020 ஆம் ஆண்டு வெளிநாட்டிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டது.

இவ்வுபகரணமானது, நீர் நிலைகளில் மிதக்கும் ஆகாயத்தாமரை மற்றும் சகதி ஆகியவற்றை அகற்ற Hydraulic சிறப்பு இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளதால், உற்பத்தியாளரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தாரின் பரிந்துரைக்கப்பட்ட நபர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு உற்பத்தியாளர் மூலம் உரிமம் பெற்ற தகுதியான பணியாளர்களால் மட்டுமே இயக்கப்பட வேண்டும்.

மேலும் இவ்வுபகரணத்திற்கு பராமரிப்பு பணியானது மிகவும் பிரதானமானதாகும். இவ்வுபகரணத்திற்கு ஆறுகள் மற்றும் கால்வாய்களில் அகத்தமான மற்றும் நச்சு தன்மை வாய்ந்த பகுதிகளில் இயக்கப்படுவதால் அன்றாட பராமரிப்பு பணிகளான Fastening of bolts, Lubricating of joints Checking of all essential wiring connections. Ensuring non slippery walk way on vessel. ஆகியவை நாள்தோறும் கடைபிடிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

மேலும் இவ்வுபகரணத்திற்கு பொருத்தப்பட்டுள்ள என்ஜினானது கடற்சார் பணிகளுக்கு பயன்படுத்தக்கூடிய உயர்ரக அதிக குதிரை திறன் கொண்ட Marine engine-ஆகும். இவற்றை உற்பத்தியாளரின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினரால் குறிப்பிட்ட கால இடைவெளியில் (இயந்திரம் பணிபுரிந்த மணி நேரத்திற்கேற்ப) உற்பத்தியாளரால் பரிந்துரைக்கப்பட்ட பராமரிப்பு பணிகளை அவசியம் மேற்கொள்ள வேண்டும்.

மேற்கண்ட காரணங்களால் ஆம்பியியன் உபகரணத்தின் உற்பத்தியாளரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் ஆம்பியியன் (Classic V C4158) உபகரணத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தம் முடிவடைந்ததால் மேற்கொண்டு மூன்று வருட காலத்திற்க்கு ஆம்பியியன் (Classic V C4158) உபகரணத்திற்கு

இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிமேற்கொள்ள (TTT ACT) தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்த விதிகளை பின்பற்றி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தகுதியான ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை (M.E.D.C.No. M1/0887 B/2022 Dt.6.03.2023) வழங்கப்பட்டு 06.03.2023 அன்று முதல் பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி குறித்து மனுதாரர் திரு. S. திருஞானம் அவர்கள் Tamil Nadu Local Bodies Ombudsmanக்கு அளித்துள்ள புகாருக்கு கீழ்கண்டவாறு விளக்கமளிக்கப்படுகிறது :-

- ஆம்பிபியன் உபகரணத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான தோராய மதிப்பீட்டானது உற்பத்தியாளர் பரிந்துரைத்த பராமரிப்பு பணிக்கான அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு தேவைப்படும் உதிரி பாகங்கள் அளவைக் கணக்கிட்டும் மற்றும் இவைகள் ஐரோப்பா கண்டம் பின்லாந்து நாட்டிலிருந்து கொள்முதல் செய்யப்படுவதால் உற்பத்தியாளர் நாட்டின் நாணய மதிப்பீட்டின் தற்போதைய மற்றும் எதிர்வரும் ஆண்டுகளில் இந்திய நாட்டின் நாணய மதிப்பீட்டிற்கு இணையான தொகையை கருத்தில் கொண்டு பராமரிப்பு பணிக்கான மதிப்பீட்டுத் தொகை கணக்கிடப்பட்டுள்ளது.

- இவ்வுபகரணத்தை இயக்குவதற்கு தேவைப்படுகின்ற மனித ஆற்றலை கணக்கிட்டும் மற்றும் அவர்களின் தகுதி மற்றும் திறன் அடிப்படையில் ஊதியம் மற்றும் இதர படிகள் வழங்குவதை அடிப்படையாகக் கொண்டு பராமரித்தலுக்கான மதிப்பீட்டுத் தொக கணக்கிடப்பட்டுள்ளது.

- பருவ மழை காலங்களில் (தென் மேற்கு மற்றும் வட கிழக்கு) ஆம்பிபியன் உபகரணம் முழு வீச்சில் பணியில் ஈடுபடுத்தப்பட்டு நீர் நிலைகளில் ஏற்படுகின்ற தடையினை அகற்றி கால்வாயில் வெள்ள நீர் கடத்தும் திறன் அதிகரிக்கப்பட்டு வெள்ள பாதிப்பு தடுக்கப்படுகிறது. பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக கடந்த 2021 2022 ஆண்டுகளில் பருவ மழைகாலம் தொடங்கும் முன்னரே நகரின் பிரதான கால்வாய்களில் ஆம்பிபியன் (Classic V C4158) உபகரணத்தின் மூலம் மிதக்கும் கழிவுகள் மற்றும் ஆகாய தாமரை அகற்றப்பட்டதால் வெள்ள நீர் வெளியேற்றுவதில் எந்த தடையுமின்றி பணிகள் மேற்கொள்ளப்பட்டு நகரின் பல பகுதிகளின் வெள்ள பாதிப்பு தடுக்கப்பட்டது.

- பருவ மழை காலம் தவிர்த்து மார்ச் மாதம் முதல் ஜூலை மாதம் வரையிலான காலங்களில் நீரோட்டம் சற்று குறைவாக இருப்பினும் ஆகாயத்தாமரை செடிகளானது ஆறுகள் மற்றும் கால்வாய்கள் முழுவதும் படர்ந்திருக்கும் காரணத்தினால் கொசு உற்பத்தி ஏற்படுவதை தவிர்த்திடவும் மற்றும் பருவமழை முன்னெச்சரிக்கையாக கால்வாய்களில் சகதியை அகற்றிடவும் ஆம்பிபியன் உபகரணம் கால்வாய் சுத்தப்படுத்தும் பணிகளில் ஈடுபடுத்தி வரப்படுகிறது. இதனடிப்படையில் ஓராண்டில் 300 நாட்களுக்கு ஆம்பிபியன் உபகரணத்தின் பணி தேவைப்படும் என கணக்கிட்டு ஓராண்டிற்கு 300 நாட்கள் என்ற அடிப்படையில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான மதிப்பீட்டுத் தொகை தோராயமாக கணக்கிடப்பட்டுள்ளது. இத்தோராய மதிப்பீடானது ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான அடிப்படை தொகை மட்டுமே ஆகும்.

- ஓராண்டிற்கு 300 நாட்கள் அடிப்படையில் மதிப்பீட்டுத் தொகை தோராயமாக கணக்கிடப்பட்டிருந்தாலும், சம்மந்தப்பட்ட சுகாதாரத் துறை, வார்டு பொறியாளர் சான்றளிக்கப்பட்ட உபகரணம் பணிசெய்த நாட்களுக்கு மட்டுமே இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கான தொகை தீர்வு செய்யப்படும் என்பது ஒப்பந்த விதியாகும். இவ்விதி ஒப்பந்த காலம் முழுவதும் கண்டிப்பாக கடைபிடிக்கப்படும்.

ஆம்பிபியன் (Classic V C4158) உபகரணத்திற்கு மூன்று வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிமேற்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளி தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்தத்தில் கலந்துகொண்ட தகுதியான இரு ஒப்பந்ததாரர்களின் குறைந்த விலைப்புள்ளி அளித்திருந்த திருவாளர் M/s. Dharshan Dredging Constructions Pvt. Ltd., அவர்களுக்கு மன்றத்தின் அனுமதியுடன் பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் ஆம்பிபியன் (Classic V C4158) உபகரணம் மூன்று வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு சரியான முறையில் தோராய மதிப்பீட்டுத் தொகை தயாரிக்கப்பட்டு தகுந்த அலுவலரின் வழியாக மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு (TTT ACT) தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதியினை பின்பற்றி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தகுதியான ஒப்பந்ததாரரான திருவாளர் M/s. Dharshan Dredging Constructions Pvt. Ltd., அவர்களுக்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு பணியாணை வழங்கப்பட்டுள்ளது. இதில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு எவ்வித தொகையிழப்பும் ஏற்படவில்லை மற்றும் இவ்வொப்பந்தம் சம்பந்தமாக யாருக்கும் சாதகமாக எந்த அதிகாரியும் செயல்படவில்லை என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேற்கூறிய விளக்கத்தின்படி ஆம்பிபியன் (Classic V C4158) உபகரணத்திற்கு மூன்று வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்க்கொள்வதற்கு திருவாளர் M/s. Dharshan Dredging Constructions Pvt. Ltd., நிறுவனத்தாருக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி குறித்து புகார்தாரர் திரு. S. திருஞானம் அவர்கள் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளுக்கான நடுவன் மன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டிற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே திரு. S. திருஞானம் அவர்கள் ஆம்பிபியன் (Classic V C4158) உபகரணத்திற்கு மூன்று வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிமேற்கொள்வதற்காக வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி குறித்து அளித்துள்ள புகாரினை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ அழைப்பாணைகள் மூலம் 04.09.2023 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.**

மனுதாரர் 04.09.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

> பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட நீர் வழித்தடங்களில் கழிவுகளை அகற்றவும், மழைக்காலங்களில் நீரோட்டம் தடைபடாமல் இருக்கவும் ஆம்பிபியன் சிறப்பு உபகரணம் 4.88 கோடி மதிப்பீட்டில் 2019ம் ஆண்டு கொள்முதல் செய்யப்பட்டது. மேற்கண்ட இயந்திரத்தை வருடத்தில் 300 நாட்கள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு செய்யப்படுவதாக தெரிவித்துள்ளனர். மேற்கண்ட உபகரணத்தின் மூலம் நீர் வழித்தடத்தில் கழிவுகளை அகற்றுதல், பருவ மழைக்காலங்களில் அதிக அளவில் நீர் வழித்தடத்தில் மிதக்கும் கழிவுகள் மற்றும் ஆகாயத் தாமரை என்கின்ற தாவரத்தை அகற்றுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்கண்ட உபகரணத்தில் வருடத்தில் 300 நாட்கள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி நடைபெற்று வருவதாகவும், மேலும் ஒரு நாளைக்கு பராமரிப்பு செலவாக ரூபாய் 22,000 செலவு செய்யப்படுவதாக மாநகராட்சி அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால், 2019ம் ஆண்டு மேற்கண்ட செலவு ஒரு நாளைக்கு ரூபாய் 6,000/– ஆகும். மேற்கண்ட உபகரணம் வாங்கியதிலும், அதனை இயக்கி பராமரிப்பதிலும் முறைகேடுகள் நடந்து வருகின்றன. மேற்கண்ட உபகரணம் வாங்கும்போது

ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. அதிலும் மாநகராட்சி அலுவலர்கள் உதவியுடன் முறைகேடுகள் நடைபெற்றுள்ளன. மேற்கண்ட உபகரணம் வாங்கியது குறித்தும், அதன் இயக்குதல் மற்றும் பராமரிப்பு குறித்தும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் விவரங்கள் கோரியும், மாநகராட்சி அலுவலர்களால் எவ்வித பதிலும் எனக்கு அளிக்கப்படவில்லை.

எனவே, மேற்கண்ட முறைகேட்டை விசாரித்திடவும், மேற்கண்ட ஆம்பிபியன் சிறப்பு உபகரணம் இயக்குதல் மற்றும் பராமரிப்புத் தொகை உண்மையாக செலவு செய்யப்படுகின்றதா என்பது குறித்தும் விசாரித்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களின் நகல் மற்றும் நீர் வழித்தடங்களில் ஆகாயத்தாமரை வளர்ந்துள்ளது குறித்த பத்திரிகை செய்தியின் நறுக்கு ஆகியவற்றை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் எனது 7.5.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி, செயற்பொறியாளர்கள் மற்றும் தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் ஆகியோர் 4.9.2023 அன்றைய விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள நீர் நிலைகளில் உள்ள கழிவுகளையும், ஆகாயத்தாமரை என்கின்ற தாவரத்தை அகற்றிடவும் Amphibian என்கின்ற உபகரணம் 2020ல் கொள்முதல் செய்யப்பட்டு, அதன் மூலம் இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் இதே போன்று ஏற்கனவே ஒரு உபகரணம் 2016ல் வாங்கப்பட்டு அதுவும் இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணியை மேற்கொண்டு வருகிறது. 2020 வாங்கப்பட்ட உபகரணத்தை இயக்குதல் மற்றும் பராமரிப்பு செய்வதற்குமான ஒப்பந்தப்புள்ளி கோரும்போது அகில இந்திய அளவில் பத்திரிகை விளம்பரம் செய்யப்பட்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகளைப் பின்பற்றி கோரப்பட்டு, மன்றத் தீர்மானத்தில் ஒப்புதல் பெறப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு மேற்கண்ட ஒப்பந்தம் வழங்கப்பட்டது. இதில் மனுதாரர் தெரிவித்துள்ளவாறு எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் வருடத்தில் 317 நாட்களுக்கு மேற்கண்ட உபகரணம் இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகளை தொய்வின்றி செய்து வருவதையும், சென்னையில் உள்ள நீர் வழித்தடங்களில் காணப்படும் ஆகாயத் தாமரை என்கின்ற தாவரத்தை அவ்வப்போது அகற்றப்படுகின்றன என்பதையும் மேற்கண்ட உபகரணத்திற்கு தினமும் ரூபாய் 22,932/- பராமரிப்புப் பணிக்காக வழங்கப்பட்டு வருவதையும், மேற்கண்ட இயக்குதல் மற்றும் பராமரிப்பின்போது தவறு ஏதும் நேர்ந்தால், அதற்கு மாநகராட்சியால் அபராதமும் விதிக்கப்படுகிறது என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

**முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறையின் மேற்பார்வை பொறியாளரின் அறிக்கை மற்றும் செயற்பொறியாளர் மற்றும் தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறிய முடிகிறது.**

மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட நீர்வழிதடங்களில் கழிவுகளை அகற்றவும், மழை காலங்களில் நீரோட்டம் தடையில்லாமல் இருக்கவும், ஆம்பிபியன் சிறப்பு உபகரணம் ரூ.4.88 கோடி மதிப்பீட்டில் 2019ஆம் ஆண்டு கொள்முதல் செய்ததிலும், அதனை வருடத்திற்கு

இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவு முறைகேடுகள் நடைப்பெற்று இருப்பதாகவும் தெரிவித்து இவ்வுபகரணத்திற்கு செலவிடப்படும் தொகை உண்மையாக செலவு செய்யப்படுகின்றதா என்பது குறித்து உரிய விசாரணை மேற்கொள்ள வேண்டி மனுவில் கோரியுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நீர்நிலைகளில் உள்ள கழிவுகளையும் ஆகாயத்தாமரை போன்ற தாவரத்தை அகற்றிடவும் ஆம்பிபியன் என்ற சிறப்பு உபகரணம் 2020ல் கொள்முதல் செய்யப்பட்டு, அதன் மூலம் இயக்குதல் (ம) பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருவதாகவும் இதே போன்று ஒரு உபகரணம் 2016ல் வாங்கப்பட்டு மேற்கண்ட பணிகளை இவ்வுபகரணத்தால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், 2020 ஆண்டு வாங்கும் போது அகில இந்திய அளவில் பத்திரிகை விளம்பரம் செய்யப்பட்டு தமிழ் நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்த விதிகளைப் பின்பற்றவும் பெருநகர சென்னை மாநகராட்சி, மாமன்ற தீர்மானத்தில் ஒப்புதல் பெறப்பட்டது என்றும், இவ்வுபகரணம் 317 நாட்களுக்கு குறைவில்லாமல் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை செய்து வருகிறது என்றும், இவ்வுபகரணத்திற்கு தினமும் ரூ.22,932/- பராமரிப்பு செலவுகள் வழங்கப்பட்டு வருவதாகவும், இவ்வுபகரணம் இயக்குதல் (ம) பராமரிப்பு போது தவறு நேர்ந்தால், அதற்கு மாநகராட்சியால் அபராதம் விதிக்கப்படுகிறது என்றும் பெருநகர சென்னை மாநகராட்சி செயற்பொறியாளர்கள் மற்றும் தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் ஆகியோர் வாக்குமூலத்தில் தெரிவித்து உள்ளனர். மேலும் இவ்வுபகரணத்திற்கு பராமரிப்பு பணியானது மிகவும் பிரதானமானதாகும் என்றும், இவ்வுபகரணமானது ஆறுகள் (ம) கால்வாய்களில் அசுத்தமான மற்றும் நச்சுத்தன்மை வாய்ந்த பகுதிகளில் இயக்கப்படுவதால் அன்றாட பராமரிப்பு பணிகளை Fastening of bolts, Lubricating of joints, checking of all essential wiring connections, Ensuring non slippry walk way on vessel ஆகியவை தினதோறும் கடைபிடிக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் இவ்வுபகரணத்திற்கு பொருத்தப்பட்டுள்ள என்ஜினானது கடல்சார் பணிகளுக்கு பயன்படுத்தக்கூடிய உயர்ரக அதிக குதிரை திறன் கொண்ட Marine Engine ஆகும் என்றும் இவற்றை உற்பத்தியாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினரால் குறிப்பிட்ட கால இடைவெளியில் (இயந்திரம் பணிபுரிந்த மணி நேரத்திற்கேற்ப) உற்பத்தியாளரால் பரிந்துரைக்கப்பட்ட பராமரிப்பு பணிகளை மேற்கொள்வது அவசியம் என்றும் பெருநகர சென்னை மாநகராட்சி இயந்திர பொறியியல் துறை மேற்பார்வை பொறியாளர் தன்னுடைய அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், மேற்கண்ட சிறப்பு உபகரணத்தை நீர்நிலைகளில் உள்ள ஆகாயத்தாமரை மிதக்கும் கழிவுகள் மற்றும் சகதிகள் அகற்றப்படுவதாக பெருநகர சென்னை மாநகராட்சி இயந்திர பொறியியல் துறையின் அலுவலர்கள் தெரிவித்திருந்த நிலையில், மனுதாரர் 1.9.2023 நாளிட்ட தினமலர் நாளேட்டில் சோழிங்கநல்லூர் பக்கிங்ஹாம் கால்வாயில் "கண்ணுக்கு எட்டும் தூரம் வரை அடர்த்தியாக ஆகாயத்தாமரை படர்ந்துள்ளது" என வெளியான செய்தி நகலினையும், சோழிங்கநல்லூர், வியாசர்பாடி, கொடுங்கையூர் பகுதிகளில் ஆகாயத்தாமரை அங்குள்ள கால்வாய்களில் அடர்த்தியாக உள்ள புகைபட நகல்களை அளித்துள்ளதை பார்க்கும் போது, அதிக விலையில் வாங்கப்பட்ட ஆம்பிபியன் சிறப்பு உபகரணத்தை இன்னும் அதிக அளவில் பயன்படுத்தவேண்டிய அவசியம் உள்ளது என இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. ஆம்பிபியன் சிறப்பு உபகரணத்தை வருடத்திற்கு 317 நாட்கள் மட்டும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வது மிகவும் குறைவாக இருப்பதாக இம்முறைமன்றம் கருதுகிறது.

கனமழை பெய்தால் கால்வாயில் நீரோட்டம் அதிகமாக இருக்கும். சென்னையில் உள்ள நீர்வழித் தடங்களில் காணப்படும் ஆகாயத் தாமரை தடுப்பதால் நீரோட்டம் தடைப்பட்டு, கரையை ஒட்டியுள்ள குடியிருப்புப் பகுதிகளில் வெள்ளம் புகுந்து பாதிப்பை ஏற்படுத்தும். எனவே அடர்த்தியாக வளர்ந்துள்ள ஆகாயத்தாமரை தாவரத்தை மேற்படி சிறப்பு உபகரணத்தின் மூலம் அவ்வப்போது அகற்றுவதை உறுதிசெய்யுமாறு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

The menace of water hyacinths blocking the canals, drainage, ponds etc. in the Chennai Metropolitan area is too well known. Though the Greater Chennai Corporation's efforts at removing these water weeds by utilizing giant machines like the "Amphibian" are laudable it suffers from lack of publicity about its operation in the media. The Greater Chennai Corporation is directed to issue local publicity as to the calendar of activities of removal of the water hyacinths in the respective zones so that the citizens are aware of the de-weeding operations executed by the Greater Chennai Corporation. The Chief Engineer of the subject in-charge is directed to ensure that the machines are put to use optimally in order to realize the full value of the high cost machinery running to crores of the Government funds. Periodical inspections while the "Amphibian" is in operation by different officials of the department concerned in the Greater Chennai Corporation, review of it results in terms of efficiency and regular maintenance will strengthen the delivery of benefits out of the devices. Periodical news releases about the operations in the area in the zones in the Press will reach the public enhancing the role in de-weeding operations conducted by the Greater Chennai Corporation to clear the waterways across the metropolis.

Similarly it should be ensured that the "Amphibian" is put to use for all the days calculated for the purpose of maintenance contract at a cost of Rs.22,932/- per day in an efficient and optimum manner.

2023–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 19–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. S. திருஞானம்,
புதிய எண்.51, பழைய எண்.81, திருப்பள்ளி தெரு,
சௌகார்பேட்டை, சென்னை – 600 001.

2) கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர்,
பெருநகர சென்னை khefuhட்சி, ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

3) மேற்பார்வை பொறியாளர்,
இயந்திர பொறியாளர் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

4) செயற்பொறியாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

5) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer).
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

**நகல்:** மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்